1975 நவம்பர் 4]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, சோத்துப் பாக்கம் கிராமத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட தரைமட்ட, நீர்த் தேக்கத் தொட்டி வீணாகப் போனதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தண்ணீர் இல்லை, அவ்வளவு தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என் பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு

குமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பு குறித்து

THIRU N. DENNIS : Sir, I call the attention of the Hon Minister for Public Works to a matter of urgent public importance, namely, the sea erosion during June 1975 at Enayam, Puthenthurai, Ramanthurai, etc., in Kanyakumari district resulting in loss of properties.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, 24—5—1975 ஆம் நாளன்று கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரையோரங்களில் கடல் கொந்தளிப்பும், அலை ஏற்றமும் ஏற்பட்டதன் காரணமாக, பெருமளவில் கடலரிப்பு ஏற்பட்டு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பின்வரும் 3 கிராமங்களில் 13 குடிசைகளுக்குச் சேதம் விளைந்தது :

(1) முள்ளூர் துறை	6 குடிசைகள்
(2) இராமன்துறை	4 குடிசைகள்
(3) இனையம்	3 குடிசைகள்
மொத்தம்	13 குடிசைகள்

[திரு. ப. உ. சண்முகம்] [1975 நவம்பர் 4

தோராயமாக மொத்தம் ரூ. 5,000 அளவிற்குச் சேதம் ஏற்பட்டது. ஆனால் அங்கு உயிர் இழப்பு ஏதும் ஏற்படவில்லை.

1974 ஆம் ஆண்டு பருவமழையின்போது, அதாவது 13—9—1974 ஆம் நாளன்று அங்கு கொந்தளிப்பும், அலை ஏற்றமும் ஏற்பட்ட காரணத்தால் பெருமளவில் கடலரிப்பு ஏற்பட்டு, கீழ்க்காணும் 6 கிராமங்களில் 191 குடிசைகளுக்குச் சேதம் ஏற்பட்டது :—

(1) கோதில்பாடு	54 குடிசைகள்
(2) கொளச்சல்	63 குடிசைகள்
(3) மேல்மிடாலம்	26 குடிசைகள்
(4) இணையம்	32 குடிசைகள்
(5) இராமன்துறை	12 குடிசைகள்
(6) முள்ளூர்துறை	4 குடிசைகள்
மொத்தம்	191 குடிசைகள்

1970-72 ஆம் ஆண்டில் மேற்சொன்ன மூன்று இடங்களில் தாற்காலிகப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அரபிக்கடலோரப் பகுதிகளில் அலைகளின் சீற்றத்தை இவை எதிர்த்து நிற்க முடியவில்லை. கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரையோரப் பகுதிகளில் கடல் அரிப்புப் பிரச்சினை ஒவ்வோராண்டும் தோன்றும் பிரச்சினையாகும். கடல் அரிப்பைத் தடுப்பதற்கு நிலையான பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதே இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய ஒரே வழியாகும். இதற்காக, கடல் அரிப்பைத் தடுப்பதற்கு அரபிக்கடலின் தமிழ்நாட்டுப் பகுதி நெடுக 14.5 கி. மீட்டர் தொலைவிற்கு நிரந்தரமான தடுப்புச் சுவர் ஒன்றை ரூ. 351 இலட்சம் செலவில் கட்டுவதற்குரிய திட்டம் ஒன்றைக் கட்டிடத் தலைமைப் பொறியாளர் தயாரித்து அத்திட்டத்திற்கு நிதியுதவி கோரி அது இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இச்செயற்குறிப்பை ஆய்வு செய்கையில், விரிவான ஆய்வின் அடிப்படையில் மதிப்பீடுகளைத் தயாரித்து இத்திட்டத்தின் பொருளாதார வாய்ப்புக் கூறுகளையும் தெரிவிக்கு

1975 நவம்பர் 4] [திரு. ப. உ. சண்முகம்]

மாறு மைய நீர்-மின்சக்தி ஆணைக்குழு இந்த அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. விரிவான ஆய்வை நடத்துவதற்கும், கடல் அரிப்பைத் தடுப்பதற்கும் நிரந்தரமான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக காற்று விச்சு, அலை ஏற்றம், கடற்கரையோரப் பகுதி இடம் பெயர்தல் ஆகிய விவரங்களைச் சேகரிப்பதற்கும், ரூ. 25,000-க்கு மதிப்பீடு ஒன்று 20—10—1975 அன்று தலைமைப் பொறியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அது தனியே பரிசிலனையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, ஆண்டுதோறும் கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை ஓரத்திலே உள்ள கிராமங்கள் கடல அரிப்பால் பாதிக்கப்படுகின்றன. பல கிராமப் பகுதிகள், பல ஏழை மீனவர்கள், குடிசைகள், அவர்களுடைய கருவிகள் எல்லாம் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டு, அவற்றிற்கு இரையாகிக் கொண்டு இருக்கின்றன. மத்திய அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றாவிட்டால், மாநில அரசாவது அந்தத் திட்டத்தை நிறைவேற்றி, அங்கேயுள்ள மக்கள் கடல் அரிப்பால் ஆண்டுதோறும் பாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கையை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறுகிற அந்தக் கொடுமையை நானே நேரில் பார்த்தேன். மத்திய அரசாங் கத்தின் உதவி கோரி ரூ. 351 லட்சத்திற்கு திட்டத்தை தயாரித்து அனுப்பினோம். மத்திய அரசாங்கம் அதை மேற்கொண்டு, முழு மையாகப் பரிசீலித்து, டிடெயில்ட் இன்வெஸ்டிகேஷன் செய்து அனுப்ப வேண்டுமென்று கேட்டிருக்கிறது. அதைச் செய்ய இருக்கிறோம்.

ஏன் மாநில அரசே செய்யக் கூடாதா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. டென்னிஸ் கேட்டார்கள். நிதிப் பற்றாக்குறை காரணமே தவிர மனம் இல்லாமல் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று காலையில் கூட ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டு இருந்தேன். மத்திய அரசாங்கம் கேரள அரசாங்கத்திற்கு 5.6 கோடி ரூபாய் மானியம் கொடுத்து இருப்பதாக அந்தப் புத்தகத்தில் படித்தேன். கேரளா அரசாங்கத்திற்கு இது

போன்ற பணிகளைச் செய்ய சமீபத்தில் மானியம் கொடுத்த மத்திய அரசு, தமிழ் நாடு அரசாங்கத்திற்கும் கொடுக்க வேண்டு மென்று இரண்டு, மூன்று மாதத்திற்கு முன்னால் நடைபெற்ற மாநாட்டிலேகூட வற்புறுத்திக் கூறியிருக்கிறேன். அதைத் தொடர்ந்து அரசு வற்புறுத்தும். நிதிநிலை பெற்றதற்குப் பிறகு அந்த வேலைகளைக் கவனிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசாங்கம் உதவிக்கு வரவேண்டும்; மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியிலிருந்தும், நான் அளித்த பதிலில் இருந்தும் மத்திய அரசாங்கம் உதவி செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ் நாடு 1975-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1975-ம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ் நாடு 1975-ம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர் களே, தமிழ் நாடு 1975-ம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.